தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 8, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 21, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*“கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு.”*

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

கண்மாயைத் தூர்வாருதல்

***3583—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வண்டியூர் கண்மாயைத் தூர் வாரி, கரையினை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வண்டியூர் கண்மாய்க்கு ரூ.62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, மார்ச் மாதம் முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் டெண்டர் விடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்று சொன்னதற்காக அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மதுரை மாவட்டத்தில் 15 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். கோயில் நகரமான மதுரையில்,பொதுமக்களுக்கும்,குழந்தைகளுக்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலையும், திருமலை நாயக்கர் மஹாலையும் விட்டால் வேறு பொழுதுபோக்கக்கூடிய இடம் எதுவுமில்லை. சினிமா திரையரங்குகள், மால்கள் மட்டுமே இருக்கின்றன. ஆகையால், அங்குள்ள கண்மாயில் நகராட்சி நிர்வாகத் துறை மூலமாகவோ, சுற்றுலாத் துறை மூலமாகவோ படகு சவாரி, குழந்தைகள் பூங்கா, நடைபாதை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து மக்கள் மகிழக்கூடிய வகையில் சுற்றுலாத் தலமாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது திரு. P.T.R. அவர்கள் அவைத் தலைவராக இருந்தார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அப்போது அந்தக் கண்மாய்க்கு ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டு, சுற்று சாலைகளெல்லாம் செப்பனிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அனைத்துக் காரியங்களையும் அப்போது செய்தோம். இதற்கிடையே 10, 15 ஆண்டுக் காலம் கடந்துவிட்டது.*

2022 ஏப்ரல் 21]

ஆனாலும், தூர் வாருவதோடு, தூர் வாரப்பட்ட மண்ணைக் கொண்டு மறு கரையிலே தீவு போன்ற மூன்று அமைப்புகளை உருவாக்குவது, செயற்கை நீர் செறிவூட்டும் கட்டுமானப் பணிகளைச் செய்வது, கண்மாய்ப் பகுதிகளில் நடைபாதைகளை உருவாக்குவது, ஆக இப்படிப்பட்ட பொழுதுபோக்கு வசதிகளும் உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறிவிட்டார்கள். அந்த வண்டியூர் கண்மாய் என்பது மாண்புமிகு அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்களது தொகுதியிலும், என்னுடைய தொகுதியிலும் பாதி, பாதியாக இருக்கிறது. இருந்தாலும், அவர்களுடைய வேண்டுகோளையும் சேர்த்து, நல்ல முறையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நன்றி சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) திரு. கோ. தளபதி அவர்கள் நன்றி சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறார்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1951 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கட்டப்பட்ட கிருஷ்ணகிரி அணையின் உயரம் 52 அடியாகும். அதன் கொள்ளளவு 2,022 மில்லியன் கன அடியாக இருந்தது. அதில் வண்டல் மண் படிந்துள்ளதால், தற்போது 1,666 மில்லியன் கன அடி நீர் மட்டும்தான் தேக்கி வைக்கப்படுகிறது. மழைக் காலங்களில் தென்பெண்ணையாற்றிலிருந்து வரும் தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது. 60 ஆண்டு காலமாகத் தூர் வாரப்படாமல் உள்ள அணையைத் தூர் வாரி, முழுக் கொள்ளளவு நீரைத் தேக்கி வைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2022 ஏப்ரல் 21*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையின்மீது இவ்வளவு அக்கறை இருப்பவர் இதற்கென ஒரு தனி கேள்வி கேட்டிருக்கலாம். யாரோ கேட்ட கேள்வியிலே நீங்கள் துணைக் கேள்வியாகக் கேட்கிறீர்கள். ஆனாலும் பரவாயில்லை. பொதுப் பணித் துறையை வகித்த இரண்டு பேர் உங்களிடம் இருக்கிறார்கள். எந்த அணையையுமே தூர் வாருவது கிடையாது. அவ்வாறு உலகத்தில் எந்த நாட்டிலும் நடப்பது கிடையாது. தூர் வாருவது என்று நாம் சும்மா சொல்லிக்கொள்கிறோம், அவ்வளவுதான். அதற்காகத்தான் மணல் போக்கி என்ற ஒன்றை அந்த அணைக்குள் வைத்திருப்போம். எவ்வளவு மணல் வந்தாலும் அந்த மணல் போக்கியின் வழியாக வெளியில் வந்து ஆறுகளில் உள்ள மண்ணோடு கலந்துவிடும். அணைகளைத் தூர் வார ஆரம்பித்தோமென்றால், அந்த மண் அனைத்தையும் எங்கே கொட்டுவது என்றே தெரியாது. ஆகவே, இயற்கையாகவே அணைகளில் சேரும் மண் வெளியேறிவிடும். அதற்காகத் தனியாக பெருமுயற்சி எதுவும் எடுக்கத் தேவையில்லை. இதுதான் இதுவரையில், சட்ட ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் பொதுப் பணித் துறையில் கண்டிருக்கின்ற ஓர் உண்மை.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

நான்குவழிச் சாலை

***3042—திருமதி ஆ. தமிழரசி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி, இளையான்குடி, காளையார்கோவில், கல்லல் மற்றும் காரைக்குடி ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் நான்குவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*